**10.03.2026**

**அ.வ.எண். 5/2021**

**பி.சா.1 – திரு. தங்கவேலு, த/பெ. பழனிக்கவுண்டர்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் புல எண்.956/3 பொதுப்பாதையில் நான் இடைவிடாத சுவாதீனத்தில் இருந்து வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வப்போது பராமரிப்புக்காக செல்வேன். பராமரிப்புக்காக செல்வேன் என்று எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர் வழக்குரை பத்தி 12 ல், வாதிகளின் இடம் ஆரம்பத்தில் நத்தம்புறம்போக்கில் இருந்து, வாதிகளின் முன்னோர்கள் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் சரிதான். புல எண்.956/3 பொதுப்பாதை என்பது, FMB ல் தெளிவாக உள்ளது.

2. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில், நான் கட்டியுள்ள வீடு வாதியின் புல எண்.956/3 ல் கட்டப்பட்டுள்ளது போல் தான் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் தவறு. புல எண்.956/3 உரிமையாளர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யாததால் என்னுடைய எதிர்வாதம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அதேபோல், நான், தாவா சொத்தில் புல எண்.956/3 ல் வடபுறம் 60 அடி விஸ்ததீணரத்திலும், தென்வடலாக சுமார் 3 அடி விஸ்தீரணத்திலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், அதை அகற்ற நான் கடமைப்பட்டவர் என்றால் நான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd/.M.Santhosham
District Munsif, Sulur